ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2065/36 - 2018 අප්‍රේල් මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.04.05

*2065/36 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இலக்கம்: பல/2/1/4/10.
குறிப்பிலக்கம்: LD/05/2002/PC/243.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கமுடைய காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

காலி மாவட்டத்தில் பலப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 88ஏ கந்தெகொடை கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்டதான கா. 4292 உம் 2017.11.14 ஆந் திகதியுடைய சுவடு வரைபடத்தில் இகக்கம் 01, 02 எனக் காட்டப்பட்டுள்ள விஸ்தீரணத்தில் சுமார் 0.0017 ஹெக்டயார் அளவுடையதான மரதானவத்தை எனும் காணி கந்தெகொடை தெவட்ட வீதியில் லத்து ஷீலாவின் வீட்டுக்கு அண்மையில் இருந்து புகையிரத வீதி வரை 12 அடியாக வீதியை விஸ்தரிப்பதற்காக காணி எடுத்துக் கொள்ளல்.

01. **துண்டு இல. 01- மரதானவத்தை; விஸ்தீரணம்: 0.0016 ஹெக்டயார்.**

வடக்கிற்கு : L.A.P.K. த சில்வா உரிமைகோரும் மரதானவத்தை; கிழ்க்கிற்கு: L.A.P.K. த சில்வா உரிமைகோரும் மாதானவத்தை; தெற்கிற்கு: கந்தெகொடை தெவட்ட வீதி; மேற்கிற்கு: கந்தெகொடை தெவட்ட வீதி.

02. **துண்டு இல. 02- மரதானவத்தை; விஸ்தீரணம்: 0.0001 ஹெக்டயார்.**

வடக்கிற்கு: கந்தெகொடை தெவட்ட வீதி; கிழக்கிற்கு: கந்தெகொடை தெவட்ட வீதி; தெற்கிற்கு: டபிள்யூ. ஜனக வசந்த உரிமைகோரும் மரதானவத்தை; மேற்கிற்கு: டபிள்யூ. ஜனக வசந்த உரிமைகோரும் மரதானவத்தை.

மேற்குறித்த காணிக்கு அல்லது ஆட்சி உரிமையை எடுத்துக் கொள்ளவிருக்கும் காணிக்கு உரித்து பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018.07.11 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பலப்பிட்டிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படி வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் 2018.07.04 ஆந் திகதிக்கு முன்னர் அக் காணியில் அவர்களுக்குரிய உடந்தைகளின் தன்மைகளையும் குறித்த காணியை அல்லது ஆட்சி உரிமையை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும், அத் தொகை கணிக்கப்பட்ட முறையினையும் எழுத்து மூலம் இரு பிரதிகளாக என்னிடம் அறிவிக்கும்படி இத்தால் கோட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பி. பீ. எஸ். அநுராதி,
பிரதேச செயலாளர்,
பலப்பிட்டிய.

பிரதேச செயலகம்,
பலப்பிட்டிய,
2018, ஏப்பிறல் 03.

4 - 708

1 A - G 27418 - 17 (2018/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.